# Envoys of Thailand, Romania, Kazakhstan and Turkey present credentials to the President of India

July 07, 2021

## தாய்லாந்து, ரோமானியா,கஜகஸ்தான் மற்று துருக்கி நாடுகளின் தூதர்கள் தங்களது சான்றுகளை இந்திய ஜனாதிபதியிடம் வழங்கினார்கள்

ஜுலை 07, 2021

இந்திய ஜனாதிபதி ஸ்ரீ. ராம்நாத் கோவிந்த்,இன்று(ஜுலை 7,2021 ) தாய்லாந்து, ரோமானியா, கஜகஸ்தான் மற்றும் துருக்கி நாடுகளின் தூதர்கள் அளித்த சான்றுகளை மெய்நிகர் வாயிலாக ஏற்றுக்கொண்டார். சான்றுகள் அளித்தவர்கள் :

1. எச்.இ. செல்வி. பட்டராத் ஹோங்டங், தாய்லாந்து அரசாட்சியின் தூதர்

2. எச்.இ. செல்வி டானில மரியானா செசானோவ் தனே, ருமேனியா தூதர்

3. எச்.இ. திரு. நுர்லன் சல்கச்பவேவ், கஜகஸ்தான் குடியரசு தூதர்

4. எச்.இ. திரு . பிராத் சுநெல், துருக்கி குடியரசு தூதர்

இந்நிகழ்ச்சியில் பேசிய ஜனாதிபதி, நியமனம் குறித்து தாய்லாந்து, ருமேனியா கஜகஸ்தான் மற்றும் துருக்கி தூதர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்த நாடுகளுடன் இந்தியா அன்பான மற்றும் நட்பான உறவுகளை அனுபவித்து வருவதாகவும், எங்கள் உறவுகள் அமைதி மற்றும் செழிப்பு பற்றிய பொதுவான பார்வையில் ஆழமாக வேரூன்றியுள்ளன என்றும் அவர் கூறினார்.

நமது கூட்டு சுகாதாரம் மற்றும் பெருளாதார நல்வாழ்வை உறுதி செய்வதற்காக கோவிட்-19 தொற்றுநோய்க்கு ஒரு தீர்க்கமான மற்றும் ஒருங்கிணைந்த பதிலை உருவாக்கும் உலகளாவிய முயற்சிகளில் இந்தியா முன்னணியில் உள்ளது என்று ஜனாதிபதி கூறினார்.' உலகின் மருந்தகம்'என, கோவிட்-19 க்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களை வழங்க இந்தியா பல நாடுகளுக்கு உதவியுள்ளது.

தாய்லாந்து, ருமேனியா, கஜகஸ்தான் மற்றும் துருக்கி தூதர்கள் தங்கள் தலைமைகளின் சார்பாக நல்வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த தொடர்ந்து பணியாற்றுவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

நியூ டெல்லி
ஜூலை 07, 2021

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.